

கழகத் தலைவர், மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளில், விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், கோலியனூர் தெற்கு ஒன்றிய கழக சார்பில் காவணிப்பாக்கம் ஊராட்சியில் குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், கோலியனூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் தே.முருகவேல், கோலியனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஏ.சச்சிதானந்தம், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மும்மொழித் திட்டத்தைத் திணிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# ஆளுநர் மாளிகை அருகில் கழக மாணவர் அணி ஆர்ப்பாட்டம்!

## ஜூன் 23ல் நடைபெறுகிறது; திருமதி ஜெ.வீரமணி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 9 - மும்மொழி திட்டத்தை திணிக்கும் பாசிச பாஜகவை எதிர்த்தும் VBSA மசோதாவை திரும்ப பெற கோரியும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களது ஆலோசனைப்படியும், தி.மு.கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது வழி நின்று

திமுக மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 23.06.2026, காலை 10 மணியளவில் ஆளுநர் மாளிகை அருகில் நடைபெறவுள்ளது.

இது குறித்து மாணவர் அணிச் செயலாளர் திருமதி ஈரோடு ஜெ.வீரமணி விடுத்துள்ள அறிக்கை அவருமாறு:

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்பி.எம். ஸ்ரீ மாடல் பள்ளி திட்டத்தை நெத்தி பொட்டில் அடித்தது போல் திட்ட வட்டமாக நிராகரித்தார்.

தற்போது கடந்த மே 15ம் தேதி ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் ஜூலை 1ஆம் தேதி முதல் 9ம் வகுப்பில் மும்மொழியை கட்டாயமாக்கியுள்ளது.

த.வெ.க. ஆட்சி அமைத்த போது கல்வி அமைச்சர் ராஜ்மோகன் மும்மொழி திட்டத்தை ஏற்க மாட்டோம் என்றார், பின்னர் எம்.ஸ்ரீ திட்டத்தை பரிசீலிப்போம் என்றும் கூறியுள்ளார்.

எதற்காக இந்த முரண்பாடு? த.வெ.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான விஜய் அவர்கள் அமைதி காப்பது ஏன்?

தங்களின் கொள்கை எதிரியான பாசிச பா.ஜ.க. விடம் கல்வியை அடகு வைக்க துணிந்து விட்டதா த.வெ.க. அரசு?

மாணவர்களின் வாழ்க்கையை சீரழிக்கும் இத்திட்டத்தை பரிசீலிக்க இன்னும் எத்தனை நாட்கள் கால அவகாசம் எடுத்துக் கொள்ளப் போகிறது இந்த சோபா மாடல் த.வெ.க. அரசு?

பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் உருது போன்ற மொழிகளைப் படிக்கலாம் என்று சொல்வார்களே தவிர, இந்த மொழிகளை கற்பிக்க ஆசிரியர்களே இல்லை.

சமஸ்கிருதம் மட்டுமே (only option) படிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விட்டு உங்கள் விருப்பப்பாடம் என மக்களை ஏமாற்றும் திட்டமே சி.பி.எஸ்.இ. 9ஆம் வகுப்பு மும்மொழித் திட்டம்.

கடந்த 10 ஆண்டுகளில் ரூபாய் 2532 கோடி சமஸ்கிருதத்தை கற்பிப்பதற்கு நிதி ஒதுக்கி அனைத்து ஏற்பாடு களையும் தயார் நிலையில் வைத்திருக்கும் பாஜகவின் Silent Mission இது என மக்களிடையே அறிய செய்வோம்.

இதுகுறித்து த.வெ.க. அரசு வாய் திறக்காமல் மௌனம் காக்கிறது.

ஒன்றிய அரசின் 'விக்சித் பாரத் சிக்ஷா அதிஷ்தான் (VBSA) மசோதா, 2025'ஐ பரிசீலிக்க அமைக்கப்பட்டுள்ள.

இந்த மசோதா முற்றிலும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது, அதை உடனடியாக மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும்.

இந்த மசோதாவின் கீழ் மூன்று புதிய கவுன்சில்கள் உருவாக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

1. ஒழுங்குமுறை கவுன்சில்
2. அங்கீகார கவுன்சில்
3. தரக்கட்டுப்பாட்டு கவுன்சில்

பல்கலைக்கழகங்களின் தரத்தை ஒருங்கிணைத்து நிர்ணயம் செய்வோம் என்று கூறிக்கொண்டு, NEET போல முகமூடி அணிந்து பல்கலைக்கழகங்களை முழுமையாகக் கட்டுப்பாட்டிற்குள் எடுக்கும் வழிவகை செய்து, தேவைப்பட்டால் பல்கலைக்கழகங்களை மூடி விடும் அதிகாரத்தையும் வழங்குகிறது" இந்த VBSA மசோதா.

மேலும், "இந்த மசோதா தவறான முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகும். இந்திய அரசியல் மைப்புச் சட்டத்தின் 7வது அட்டவணையில் உள்ள பட்டியல் 1ன் நுழைவு 66 (Entry 66 of List 1)ஐப் பயன்படுத்தி, நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லாத ஒரு சட்டத்தை இயற்ற முயல்கிறது ஒன்றிய பாசிச பாஜக அரசு.

குறிப்பாக தமிழ்நாடு போன்ற மாநிலங்களில், சமூக நீதியை நிலை நாட்டும் நோக்கிலேயே அரசுப் பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் நிறுவப்பட்டன.

மாநில அரசின்

1. இட ஒதுக்கீடு கொள்கை,
2. மிகக் குறைந்த கட்டணம் மற்றும்
3. பெண்கல்விக்கான சிறப்புத் திட்டங்கள்

ஆகியவைதான் இங்கு உயர்கல்வியை அனைவருக்கும் சாத்தியமாக்கியுள்ளன.

பொதுக் கல்வி மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்கான மாநில தளம் (Save Public Education and Culture in Society Tamil Nadu அல்லது SPCSSTN) என்ற அனைவருக்கும் சமமான, தரமான, மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி முறையை வலியுறுத்தும் ஒரு முக்கிய கல்விசார் அமைப்பு இந்த மசோதாவை மெக்கார்த்தியிசத்தின் (Mc Carthyism) இந்திய வடிவம் என்று விமர்சித்துள்ளது.

மேலும் பட்டப் படிப்பு படிக்கும் போதே தொழிற்கல்வி பழகுவது மற்றும் இந்திய அறிவுசார் அமைப்புகளுக்கு (Indian Knowledge Systems) முக்கியத்துவம் அளிப்பது போன்ற திட்டங்கள், தற்போதைய அதிகார வர்க்கத்திற்கு அடிபணிந்து நடக்கும் ஒரு குறிப்பிட்ட சித்தாந்தக் கூட்டத்தை உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

எனவே இந்தத் திட்டத்தை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும் என்று தி.மு.க. மாணவர் அணி சார்பாக வலியுறுத்துகிறோம்.

இதை வலியுறுத்தி வருகிற 23 ஆம் தேதி காலை 10 மணியளவில் ஆளுநர் மாளிகை அருகே, கழக மாணவர் அணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சிலிண்டர் விலை உயர்வு - அதிர்ச்சியில் இல்லத்தரசிகள்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூன் 9 - சென்னையில் கடந்த 3 மாதத்தில் வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.89 உயர்ந்து 957.30க்கு விற்பனை ஆகிறது. இது குறித்து 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-




இந்தியாவில் வீட்டு உபயோகத்திற்கான எல்.பி.ஜி. விலையை மீண்டும் கூட்டி அதிர்ச்சியளித்திருக்கிறது ஒன்றிய அரசு. எல்.பி.ஜி. விலையில் சிறிய மாற்றம் ஏற்பட்டாலும் அது நாடு முழுவதும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இதன் விளைவாக, பணவீக்கம் அதிகரிக்கும் மற்றும் பொருளாதார வளர்ச்சி குறையும். எல்.பி.ஜி. விலை இறக்குமதி சம விலை (இம்போர்ட் பேரிட்டி பிரைஸ்) அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. சர்வதேச சந்தையில் ஒரு நாடு இறக்குமதி செய்யும் எல்.பி.ஜி. விலையை அடிப்படையாகக் கொண்டு ஐ.பி.பி. அளவீடுகள்தீர்மானிக்கப்படும்.

இந்தியா அதிகளவில் எரிவாயுவை வாங்கும் நிறுவனத்தின் எல்.பி.ஜி. விலை, எப்.ஓ.பி. விலை, கடல் சரக்கு போக்குவரத்துச் செலவுகள், காப்பீடு தொகை, சுங்க வரி, துறைமுகச் செலவுகள் ஆகியவற்றைச் சேர்த்து ஐபிபி விலை தீர்மானிக்கப்படும். இந்த ஐ.பி.பி. விலை பொதுவாகவே டாலரில்தான் இருக்கும், இதை இந்திய ரூபாய்க்கு மாற்றி இந்திய எண்ணெய் நிறுவனங்கள் விற்பனை விலையை ஒரு மாதத்தின் துவக்கத்தில் தீர்மானிக்கும். விற்பனைக்கு வரும் போது ஜி.எஸ்.டி., கலால் வரி, சரக்குக் கட்டணம் ஆகியவற்றைச் சேர்த்து விலை மாறுபடுகிறது.

இதன் அடிப்படையில் தான் இந்தியாவில் ஒவ்வொரு மாதமும் எல்பிஜி சிலிண்டருக்கான விலை ரீசெட் செய்யப்படுகிறது. ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு அதிகபட்சம் 12 மானிய சிலிண்டர்கள் பெறும் உரிமை உள்ளது. விலைவாசி உயர்வால் மக்கள் ஏற்கனவே சொல்லொணாத் துயரில் தவிக்கும் நிலையில் நாடு முழுவதும் வீட்டு உபயோக சிலிண்டர் விலையை ஒன்றிய அரசு ரூ.29 அதிகரித்து அடுத்த இடியை இறக்கியுள்ளது. டெலிவரி ஊழியருக்கு ரூ.50 வரை கொடுக்க வேண்டியதால் சிலிண்டர் விலை ரூ.ஆயிரத்தை தாண்டியது.

ஈரான் அமெரிக்கா இடையிலான போர் காரணமாக கடந்த சில மாதங்களாக வணிக சிலிண்டர்கள் தட்டுப்பாடு நிலவி வருகிறது. போர் தொடங்கியது முதல் காஸ் சிலிண்டர் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இந்த ஜூன் மாதத்தின் முதல் தேதியில் வணிக பயன்பாட்டுக்கான 19 கிலோ எடை கொண்ட சிலிண்டர் விலை ரூ.46 வரை அதிகரிக்கப்பட்டது. அதன்படி சென்னையில் ரூ.3,283 ஆக அதிகரித்தது. 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக காஸ் சிலிண்டரை பொறுத்தவரை கடந்த மார்ச் 7ம் தேதி ரூ.60 உயர்த்தப்பட்டது.

அதன்படி டெல்லியில் ரூ.913, மும்பையில் ரூ.912.50, கொல்கத்தாவில் ரூ.939, சென்னையில் ரூ.928.50, சேலத்தில் ரூ.946.50 என விநியோகம் செய்யப்பட்டது. கடந்த மாதம் விலை உயர்த்தப்படவில்லை. இந்த மாதம் வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் திடீரென உயர்த்தி உள்ளன. நாடு முழுவதும் ரூ.29 விலை உயர்ந்து இன்று அமலுக்கு வந்துள்ளது. அதன்படி சென்னையில் ரூ.29 உயர்ந்து ரூ.928.50 ல் இருந்து ரூ.957.50ஆக உயர்ந்துள்ளது.

டெலிவரி ஊழியர்களுக்கு குறைந்த பட்சம் ரூ.30 முதல் ரூ.50வரை கொடுக்க வேண்டி உள்ளது. கிராமப்புறங்களில் டெலிவரி ஊழியர்கள் 100 ரூபாய் வரை அதிகம் வாங்குகின்றனர். இதனால் சிலிண்டர் விலை மீண்டும் ஆயிரத்தை தாண்டி இருப்பது இல்லத்தரசிகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

கடந்த 3 மாதத்தில் வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.89 உயர்ந்துள்ளது. எப்படி ஊதினாலும் தனது காதில் ஏற்றிக் கொள்ளாத செவிட்டு அரசிற்கு தற்போதைய மக்களின் புலம்பல் மட்டும் கேட்டு விடவா போகிறது?. இதற்கான விலையை எல்லாம் அவர்கள் மொத்தமாக கொடுக்கும் காலம் விரைவில் வரும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சில கேள்விகளும், சில விளக்கங்களும்!

“எந்தக் கட்சிக்கும் தங்களது அரசியல் முடிவைத் தீர்மானிக்கும் உரிமை உண்டு. யார் மனத்தையும் புண்படுத்தும் சொற்களைப் பேச வேண்டாம் என்று தொடக்கத்திலேயே தொண்டர்களுக்குத் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் கூறியிருந்தார். சென்னை அறிவாலயத்தில் மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணையும் விழாவில் பேசிய ஸ்டாலின், ”திமுக ஆட்சிக்கு வர வேண்டும் என்பதற்காக, நம்மோடு கூட்டணி அமைத்த கட்சிகளின் தயவில் தான் தமிழ்நாட்டில் ஒரு ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. நாங்கள் செல்கிறோம் என்று சொன்ன போது, அது உங்கள் விருப்பம்; அது உங்களுக்கு இருக்கும் ஜனநாயகம்; அதை நான் தடுக்க மாட்டேன் என்று அந் நிகழ்ச்சியில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

2026 நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் பங்கேற்று, ஒரு ராஜ்யசபா இடமும் 28 சட்டமன்ற தொகுதி இடங்களை பெற்றது காங்கிரஸ். ஐந்து இடங்களில் மட்டும் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியானது; இதற்காக தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்தார் மு.க.ஸ்டாலின் ஆனால், காங்கிரஸ் கட்சித் தலைவர் இராகுல் காந்தி; தேர்தல் பரப்புரையின் போது, திமுக தலைவர் தளபதி ஸ்டாலினுடன் பங்கேற்றுப் பிரச்சாரம் செய்ய முன் வரவில்லை. தேர்தல் முடிந்த பின்னரும் திமுக தலைமைக்கு நன்றி கூடக் கூற வரவில்லை. அந்தக் காங்கிரஸ் கட்சியானது நான்கு கால் பாய்ச்சலில் த.வெ.க. கூட்டணி அரசில் பங்கேற்று அமைச்சர்கள் பதவி பெற்று பூவோடும் பொட்டோடும் மங்கல வாழ்க்கை நடத்திக் கொண்டு இருக்கிறது. த.வெ.க. அமைச்சரவையில் சேர்ந்த காங்கிரஸ் கட்சி திமுகவின் முதுகில் குத்தி துரோகம் செய்துவிட்டு இப்பொழுது ‘இண்டியா’ கூட்டணி அழைப்பு விடுத்திருப்பதை திமுக அதில் பங்கேற்காமல் புறக்கணித்துள்ளது.

உலக வரலாற்றில் நடைபெற்ற அரசியல் துரோகம் என்பது ஜூலியஸ் சீசர் படுகொலை செய்தது தான். சீசரின் அதீத அதிகார வளர்ச்சி கண்டு பயந்த ரோமானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் (செனட்) சிலர் சூழ்ந்து நின்று சீசரைக் கத்திப் பாய்ச்சல் நடத்திய போது, எதிர்பாராத வகையில் சீசரின் நண்பன் மார்க்கஸ் ஜூனியர் புருட்டஸ்சும் திடீரெனக் கத்தியால் அடி வயிற்றில் குத்தினான். ”நீயுமா புருட்டஸ் (ET tu Brute? (you too, Brutes?...) என்றவாறு துரோகிகளிடம் 23 கத்திக் குத்துகளை வாங்கிய சீசர் மரணத்தின் மடியில் சரிந்து விழுந்தான். இது கி.மு.44 இல் மார்ச் 15 இல் சீசரைக் கொன்ற வரலாறு. ஆனால், காங்கிரஸோ பதவிவெறி பிடித்த காங்கிரஸோ கூட்டணித் தர்மத்தை மீறித், தனது துரோகச் செயல்பாடுகளால் நன்றி மறந்து அரசியல் படுகொலைகள் நடத்திக் கொண்டிருக்கின்றது.

காங்கிரஸ் கட்சி இப்பொழுது மட்டுமல்ல; 1952இல் சுதந்திர இந்தியாவில் சென்னை மாகாணச் சட்டமன்றத்திற்கு நடந்த முதல் தேர்தலில், தி.மு.க. போட்டியிடவில்லை. எனினும், திமுகவின் ஆதரவு பெற்று அதன் ”திராவிட நாடு திராவிடருக்கே கொள்கை, மாநில உரிமைக் கொள்கை, பொருளாதாரக் கொள்கையை ஏற்று விழுப்புரம் எஸ். எஸ். இராமசாமி படையாட்சியின் உழைப்பாளர் கட்சி (Tamil Nadu Toilors Party TTP) யும், மாணிக்கவேலு நாயக்கரின் தலைமையில் உள்ள பொதுவுடமைக் கட்சி எனும் காமன் வீல் (Common Weal Party) கட்சியும் அண்ணா தலைமையிலான தி.மு.க.வின் உறுதிமொழிப் பத்திரத்தில் (Affidavit) கையெழுத்துபோட்டுவிட்டு நின்றனர்.

அவர்களில் 8 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களும், 42 பேர் சட்டமன்றத்திற்கும் வெற்றி பெற்றுத் தேர்ந்தெடுக்க பட்டிருந்தனர். மொத்தம் 376 சட்டமன்ற உறுப்பினர்களில் 152 பேர் மட்டுமே காங்கிரஸ் இருந்ததால், போதிய பெரும்பான்மையின்றி ஆட்சி அமைக்க இயலவில்லை. உடனே, காமராஜர் களத்தில் இறங்கியதால், கழகத்தின் ஆதரவோடு வெற்றி பெற்றவர்கள் பலர் ஒப்பந்தத்தை மறந்து ஆயாராம், காயாராம் போன்று கட்சி மாறிகளாகப் பயன்பெற்று அமைச்சர்களாக்கப்பட்டனர். இரு கட்சிகளையும் சுயேச்சைகளையும் விலைபேசி இராஜாஜி தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைத்த வரலாறு இன்றும் காங்கிரஸ் செய்த தேர்தல் துரோகம் பற்றிப் பேசும். கட்சி மாறிப் பதவி பெற்றவர்களுக்கு எதிராக அண்ணாவின் ஆலோசனை பேரில் வாலாஜாபாத்தில் திமுக கருப்புக் கொடி காட்டியது.



**கவிஞர் தமிழ்தாசன்**
*கழக தீர்மானக்குழுத் தலைவர்*

தி.மு.க. கூட்டணியில் இருந்து வெற்றி பெற்று ஆளுங்கட்சி அமைச்சரவையில் பங்குப்பெற்ற கட்சியின் சில தலைவர்கள், திமுக பற்றி விமர்சனங்கள் செய்து வருகிறார்கள்.

மக்கள் வரிப்பணத்தில் இயங்கி வரும் அரசின் தலைமைச் செயலகமானது, த.வெ.க.வின் தலைமை அலுவலகமாக மாறி விட்டது. பிற அரசியல் கட்சியினரைக் சேர்ப்பதும், காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் ப. சிதம்பரமே சென்று அரசியல் பேசி மாநிலங்களவை எம்.பி. சீட் வாங்குவதுமான கரை வேட்டிகள் நடமாடும் அரசியல் கட்சிகள் தற்போது கோட்டையில் கொடிகட்டிப் பறக்கின்றன.

ஊழல் தவறே செய்யாத நபர் என்றும் உத்தமபுத்திரர்கள் என்றும் பாராட்டு தெரிவித்து நடிகர் விஜய் ஆட்சிக்கு ஆதரவும் அமைச்சரவையில் பங்கு பெற்றும் பேசி வருகிறார்கள் சிலர். அது உண்மையா? சென்னை உயர் நீதிமன்றமே உறுதிப்படுத்துகிற அளவுக்கு, தான் நடித்த திரைப்படத்தில் வாங்கிய ரூபாய் 15 கோடி வருமானத்தைக் கணக்கு காட்டாமல் மறைத்த ஊழல் ”புலி அல்லவா அந்த நடிகர்? சட்டமன்றத் தேர்தலில் தனது அசையும் சொத்து விவரம் கொடுத்த போது, பெரம்பூர் வேட்பு மனுவில் ரூபாய் 115.13 கோடி என்றும், திருச்சி கிழக்கு தொகுதியில் ரூபாய் 220.15 கோடி என்றும், சுமார் 105 கோடிக்கு மேல் ஏமாற்றிக் கணக்கு காட்டிய இந்த உத்தம நபர் மீது உயர்நீதிமன்றத்தில் இன்று வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வருமானவரித் துறைக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இவர் தான் ஊழலை ஒழிக்கப் போகிறாராம்? இப்படிபட்ட நபரை நம்பி, அரசில் அமைச்சர்களாகப் பங்கேற்றும் அரிச்சந்திர மகாராஜா இவர் தான் என்று சில கட்சிகள் த.வெ.க. அரசுக்கு ஆதரவு கொடுக்கின்றனவா?

கழகக் கூட்டணியில் இருந்தபோது தேர்தல் பரப்புரையில் வி.சி.க. கட்சித் தலைவர் நண்பர் திருமாவளவன் என்ன பேசினார்?... இன்றும் அவருடைய பேச்சுகள் வீடியோ காணொளிப் பேழையில் பதிவாகிச் சாட்சியங்களாக இருக்கின்றன. ”யாரிடம் வாலாட்டுகிறாய்? பதவியைப் பார்த்துப் பல்லை இளிக்கிறவன் இல்லை இந்தத் திருமாவளவன்... பதவி இந்தத் தலையில் இருக்கும் முடிக்குச் சமமாகக் கருதுகிறவன்

அதுமட்டுமா பேசினார். ”தம்பி சீமானும், தம்பி விஜய்யும் ஆர். எஸ்.எஸ். பெற்று எடுத்த பிள்ளைகள்; அவர்கள் பா.ஜ.க.வின் பிள்ளைகள் என்பது அம்பலமாகி இருக்கிறது! தி.க. காரர்கள், தி.மு.க.காரர்கள் பேசாமல் வாய் மூடி மௌனித்திருக்கலாம்... ஆனால், திருமாவளவனால் அப்படி இருக்க முடியாது!..... நீங்கள் தமிழுக்காகவும், தமிழ்நாட்டு மக்களுக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் போராடக் கட்சி தொடங்கவில்லை; தி.மு.க.வை வீழ்த்துவதற்கு ஆர்.எஸ்.எஸ்.க்காகக் கட்சி தொடங்கி இருக்கிறீர்கள். பெரியார், அம்பேத்கர் பேசிய அரசியலையும் சேர்த்து வீழ்த்துவதற்கு நீங்கள் போராடிக் கொண்டிருக்கிறீர்கள்!.... ”விசில் அடிப்பவர்களைத் தியேட்டருக்கு அனுப்புங்கள்; சட்டசபைக்கு வேண்டாம்!.. சட்டசபையில் விசில் அடிக்க முடியாது. தியேட்டருக்கு வேண்டுமானால் அனுப்புங்கள்!.. என்று சிம்மக் குரல் எழுப்பி ஓங்கிப் பேசியவர் தான் நம் நண்பர் திருமாவளவன்.

அதுமட்டுமல்ல; சென்னை ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற்ற தி.மு.க. பவள விழாவில் (17092024) கலந்துகொண்ட திருமாவளவன் பேசும்போது ”தி.மு.க.,தி.க.; எனும் இரட்டைக் குழலுடன் மூன்றாவது குழலாக வி.சி.க. இருக்கும்... எனச் சத்தியம் செய்து நெஞ்சை நிமிர்த்திக் கட்டபொம்பனாக மாறி அரசியல் பேசிய திருமாவளவனது மூன்றாவது துப்பாக்கிக் குழல் என்ன ஆனது? பொம்மைத் ”துப்பாக்கிப் பட கதாநாயகனின் ஆட்சியில் அவரது கட்சியும் அவரும் பங்கேற்று இருக்கின்றனர். மதவெறி பிடித்த சக்திகளை வீழ்த்துவதற்குத் தி.மு.க. அணியில் பங்கேற்று இருந்தவர்களின் கொள்கையானது; இன்று ஒரே ஒரு அமைச்சர் பதவிக்காகத் தனது மூன்றாவது குழாய் துருப்பிடித்து உடைந்து போய்விட்டது போலும்!

தி.மு.க. கூட்டணியில் எட்டு இடங்களைப் பெற்ற வி.சி.க. இரண்டு இடங்களில் வெற்றி பெற்றது. தேர்தல் பிரச்சாரத்தில் நாடு முழுவதும் சென்று திரும்பிய நிலையில்; களைப்புற்று இளைப்பாறாமல் திண்டிவனம் தொகுதியில் நின்ற வன்னி அரசை ஆதரித்து வெற்றி பெற வைப்பதற்காக தி.மு.க. இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரத்தில் கலந்து கொண்டார். அவர் பேசிய போது, எனது சேப்பாக்கம் தொகுதிக்குக் கூட நான் பிரச்சாரத்திற்கு முழுமையாகச் செல்ல முடியவில்லை. ஆனால், நம் அண்ணன் வன்னி அரசு வெற்றி பெற வேண்டும் என்பதற்காக உங்களிடத்தில் வாக்கு கேட்கிறேன். வெற்றி பெற வைப்பீர்களா?.... உறுதியாக வெற்றி பெறச் செய்யுங்கள்! என்று வாக்காளர்ப் பெருமக்களிடத்தில் மூச்சு இறைக்க, இறைக்க பேசினார். அதில் வெற்றி பெற்ற வன்னி அரசு,” தூய சக்தி ஆட்சி? யில் இன்று அமைச்சராக்கப்பட்டு மஞ்சள் குங்குமம் கொள்கை உறுதியோடு அமைச்சரவையில் இருந்து செயல்பட்டு வருகிறார்.

2001 இல் அ.தி.மு.க. கூட்டணியில் நின்று மங்களூர் சட்டமன்றத் தொகுதியில் நின்று வெற்றி பெற்ற திருமாவளவன் பின்பு திமுக கூட்டணிக்கு மாறினார். 2004 இல் பிப்ரவரியில் மங்களூர் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். அதற்குக் காரணம், சிதம்பரம் மக்களவைத் தொகுதியில் நிற்க, தனக்கு வாய்ப்பு வழங்கவில்லை என்றும், ஈழத் தமிழர் விவகாரத்தில் அதிருப்தி ஏற்பட்டதாகவும் கூறிக் கூட்டணித் தர்மம் கருதி ராஜினாமா செய்வதாகக் கூறினார். அப்படியெல்லாம் சுயமரியாதை கொண்டு கூட்டணித் தருமம் காத்து வந்த திருமா அவர்கள்... இன்று கூட்டணித் தர்மத்தை விட்டுக் கொள்கையைக் குழி தோண்டிப் புதைத்து விட்டுத் தேர்தல் ஈரம் காய்வதற்குள் த.வெ.க அமைச்சரவையில் சேர்ந்தது எப்படி? என்று சொல்ல வேண்டும்...

கூட்டணித் தலைவர் மு.க. ஸ்டாலினைச் சந்தித்த இந்திய யூனியன் முஸ்லிம் கட்சித் தலைவர் கே.எம்.காதர் மொய்தீன் அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த போது, ”தி.மு.க. கூட்டணியில் நீடிப்போம்; மு.க. ஸ்டாலின் எடுக்கும் முடிவே எங்கள் முடிவு. த.வெ.க. அரசுக்கு ஆதரவோ, அல்லது அரசில் பங்கேற்கவோ மாட்டோம் என்று உறுதித்தொனியில் பேசினார். ஆனால், முந்தைய நிலைப்பாட்டை மாற்றித் தனது கட்சியின் பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். ஷாஜகானைச் சிறுபான்மைத் துறை அமைச்சராகப் பங்கேற்க வைத்தார். இது பற்றிக் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

”இது அரசியல் சந்தர்ப்பவாதம். தி.மு.க.வில் அனைத்தும் அனுபவித்து விட்டுத் தற்போது அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்று த.வெ.க.பக்கம் தாவி விட்டார்; முதல்வர் விஜய்யை அளவுக்கு அதிகமாகப் புகழ்கிறார்; தனது சுயநலத்தோடு பாராட்டி விஜய்யின் இரசிகர் மன்றத் தலைவர் போல் செயல்படுகிறார்; கொள்கை உறுதியில்லாமல் வாக்களித்த மக்களுக்குத் துரோகமிழைத்துள்ளார் என்று கடுமையான விமர்சனங்கள் தமிழ்நாட்டில் சிறுபான்மை மக்கள் மற்றும் இஸ்லாமிய அமைப்புகள் மத்தியில் எழுந்துள்ளன .

”என் வலது கையில் சூரியனை யும், இடது கையில் சந்திரனை யும் வைத்தாலும், நான் ஏகத்துவ பிரச்சாரத்தை இஸ்லாம் பணியை கை விட மாட்டேன் என்று கொள்கையில் உறுதியாக நின்றவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். அவர் வழியில் வந்தவர்கள் நேற்று ஒரு வாசகம்; இன்று ஒரு வாசகம் சொல்லி அரசியலில் அறம் பிறழ்ந்து செல்வது எப்படி நியாயமாகும்?

1972 ஏப்ரல் மாதம் கண்ணியமிகு காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்கள் உடல் நலங்குன்றி ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது, முதல்வராக இருந்த கலைஞர், வெளியூர் நிகழ்ச்சிகளை ரத்து செய்து விட்டு வந்து சந்தித்தார். ”நான் கருணாநிதி வந்திருக்கிறேன் என்று சொன்னார். இறுதி மூச்சு நெருங்கிய நேரத்திலும், ”கலைஞர் அவர்களே நீங்கள் தான் இனி இந்த இஸ்லாமியச் சமுதாயத்தின் காவலர். இவர்களை எக்காரணத்தைக் கொண்டும் கைவிட்டு விடாதீர்கள் என்று உருக்கமாக கேட்டுக் கொண்டார். இது பற்றி நெஞ்சுக்கு நீதி நூலில் கலைஞர் எழுதிப் பதிவு செய்துள்ளார். ஏ.கே. ரிபாயி (A.K. Rifaie) என்பவரும் இச் செய்தியைத் தனது ”கவ்மின் காவலர் என்ற நூலிலும் சுட்டிக் காட்டியுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகம் இசுலாமியர்கள் உள்ளிட்ட சிறுபான்மை மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சமூக நீதி இயக்கம் என்பதை யாரும் மறந்து விட முடியாது. மறுத்தும் ஒதுக்கி விட முடியாது.

சிறுபான்மை மக்கள் குறித்து தி.மு.க. தலைவராக இருந்த கலைஞரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, ”அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் (Protectable Society) என்றார். உடனே நிருபர்கள், அப்படியானால் பெரும்பான்மை மக்கள் பற்றி என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டபோது, ”அவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் (Respectable Society) என்றார்.

காயிதே மில்லத் பிறந்தநாளின் போது, அவரது கல்லறையில் மலர்ப் போர்வை போர்த்தி விட்டுத் திரும்பிய நேரத்தில், நிருபர்கள் எழுப்பிய சிறுபான்மை மக்கள் பற்றிய கேள்வி ஒன்றுக்கு, பதிலளித்த கலைஞர், ”சிறுபான்மை மக்களுக்கு ஒரு ஆபத்து, தீங்கு என்றால்; அது என் பிணத்தைத் தாண்டித் தான் நடக்கும் என்றார். அச் செய்தி இந்தியா முழுவதும் எதிரொலித்தது மட்டுமல்லாமல் தொடர்ந்து கலைஞர் அதன்படியே நடந்து வந்தார் இயக்கத்தையும் நடத்தி வந்தார். அதே போலத் தான் நீதிக்கட்சியின் தலைவர்கள் தொடர்ந்து, பெரியார், அண்ணா, கலைஞர் மற்றும் இன்று தளபதி மு.க.ஸ்டாலின் எனக் கட்சியிலும், ஆட்சியிலும் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பும், நலம் சார்ந்த திட்டங்களும் செய்து கொண்டிருப்பது தி.மு.க. என்பது யாரும் மறுக்க முடியாத வரலாற்றுச் செய்திகளாகும்.

சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில் நின்று வெற்றி பெற்ற மனித நேய ஜனநாயகக் கட்சியின் தலைவர் மு. தமிமுன் அன்சாரி, திமுக தலைவர் மு.க. ஸ்டாலினைச் சந்தித்து நன்றி கூற வந்த போது, ”நான் எனது எம்.எல்.ஏ. பதவியை விட்டு விலகுகிறேன்; தாங்கள் அந்த இடத்தில் நின்று வெற்றி பெற்றுச் சட்டசபை செல்ல வேண்டும் என்று ஆதங்கத்தோடு சொன்னார். ஆனால் ”அப்படி ஏதும் செய்து விடாதீர்கள்; தாங்கள் சட்டமன்றத்தில் இருக்க வேண்டும் என்று தளபதி அவர்க்கு ஆறுதலும் அறிவுரையும் கூறி அனுப்பினார்.

திருச்சியில் பேசிய ம.தி.மு.க.வின் தலைவர் வைகோவின் மகன் துரை வைகோ ”திமுக கூட்டணியில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டது துரதிஷ்டமானது என்று கூறி செய்திகள் வருகின்றன. உதயசூரியன் சின்னம் கொண்ட தி.மு.க.வில் தான் மாநிலங்களவைக்கு 4 முறை நின்று 24 ஆண்டுகள், மக்களவையில் ஒரு முறை 5 ஆண்டுகள் என எம்.பி. பதவி பெற்று 29 ஆண்டுகள் பொறுப்பில் இருந்தவர்தாம் வைகோ. வி.சி. கட்சி, பொதுவுடைமைக் கட்சிகள் அவரவர் சின்னத்தைப் பெற்றுக் கேட்டு நின்றனர். ஆனால், வைகோ அவர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டது ஏன்? திமுக ஆட்சியிலும், கட்சியிலும் பல்வேறு பயனடைந்தவர்கள் திமுக ஆட்சி வெற்றி பெற்று இருந்தால்; இந்தத் துரதிஷ்டப் பேச்சு நடந்து இருக்காது. மாஜி நடிகர் விஜய்யோடு தி.மு.க தலைவர் மு.க. ஸ்டாலினை இணைத்துப் பேசுவது என்பதை எந்த விதத்திலும் கழகத் தொண்டன் ஏற்றுக்கொள்ள மாட்டான்.